பக்கங்கள் 12
விலை ரூ. 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 39
கதிர் : 74

வியாழக்கிழமை 08 பெப்ரவரி 2024

தை 24 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2055



“அப்ப ரணிலார் தன்னை ஒரு சிங்களப் பாரதியார் என்று நினைக்கிறார் போல...”

# மாகாணசபைகளுக்குரிய அதிகாரங்கள் வழங்கலாம்



## கொள்கை விளக்கவுரையில் ஜனாதிபதி ரணில் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் ‘கப்சிப்’

**கொழும்பு, பெப்ரவரி 8**

**மாகாணசபைகளுக்குரிய சில அதிகாரங்கள் உரிய வகையில் வழங்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று ஆற்றிய அரசின் கொள்கை விளக்க உரையின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.** »11

## பாரதியின் கவிதை: பாடினார் ரணில்

கொழும்பு, பெப்.8
நாடாளுமன்றத்தில் தனது கொள்கை விளக்கவுரையை நிகழ்த்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஒற்றுமைக்கான உதாரணமாக பாரதியாரின் கவிதையை சிங்கள மொழிபெயர்ப்பில் எடுத்துக் காட்டினார். "19ஆம் நூற்றாண்டில் மகாகவி பாரதியார் தனது »11

## தமிழ், முஸ்லிம் கட்சிகள் உட்பட நாட்டுக்கான பயணத்தில் அனைவரும் ஒன்றிணைக!

அழைக்கிறார் ரணில்

கொழும்பு, பெப்.8
நாட்டுக்கான பொதுப் பயணத்தில் தமிழ், முஸ்லிம் கட்சிகள் இணைந்துகொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு »11

## சஜித் வெளியே பொன்சேகா உள்ளே

கொழும்பு, பெப். 8
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை விளக்க உரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சபையில் இருந்து நேற்று »11

## இலங்கை- சீனா ஒப்பந்தம் இழுபறி!

கொழும்பு, பெப்.8
இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை இழுபறி நிலையில் உள்ளது என்று தெரிவித்துள்ளார் இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி. இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: தீர்வையற்ற வர்த்தகத்துக்குரிய காலப்பகுதி தொடர்பாக சீனாவுக்கும், »11

## தன்னிச்சையான அரசுக்கு ஆதரவில்லை!

*ஐக்கிய மக்கள் சக்தி திட்டவட்டம்*



கொழும்பு, பெப்.8
தன்னிச்சையாகச் செயற்படும் அரசாங்கத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவு வழங்காது என்று எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவும், நாடாளுமன்ற »11

## சில்மிஷக்காரர்களுக்கு இனிமேல் சிறைவாசம்!

கொழும்பு, பெப்.8
பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் பெண்களிடம் தகாதமுறையில் நடந்து கொள்பவர்களுக்கு எதிராக விசேட வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.
இந்த விசேட நடவடிக்கை நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று மகளிர் மற்றும் சிறுவர் பணியகத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரேணுகா ஜயசுந்தர தெரிவித்தார்.
இரகசியமான முறையில் கமரா பொருத்தப்பட்ட சிவில் உடை »11

## தும்புத் தொழிற்சாலை தீயில் எரிந்து நாசம்

*கிளிநொச்சியில் சம்பவம்*

கிளிநொச்சி, பெப்.8
கிளிநொச்சி, கோணாவிலில் உள்ள தும்புத் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட தீப்பரவல் காரணமாக பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் தீக்கிரையாகியுள்ளன. இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது. தீப்பரவலை அடுத்து அயலவர்களும், தீயணைப்புப் »11

## சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட 4 கோடி ரூபா பெறுமதியான உணவுப்பொருள்கள் அழிப்பு

வவுனியா, பெப்.8
சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு, கடந்த ஆண்டு பறிமுதல் செய்யப்பட்டு நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்ட சான்றுப் பொருள்கள் வவுனியா மேலதிக நீதிவான் முன்னிலையில் நேற்று அழிக்கப்பட்டன. இவற்றின் பெறுமதி சுமார் 4 கோடி ரூபா என்று தெரிவிக்கப்பட்டது. »11

## மணலுடன் தப்பியோடிய டிப்பர் சூடு நடத்தி மடக்கிய பொலிஸ்!

யாழ்ப்பாணம், பெப்.8
அறிவுறுத்தலை மீறித் தப்பிச்சென்ற டிப்பர் வாகனத்தை துப்பாக்கிச்சூடு நடத்தி, பொலிஸார் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததுடன், டிப்பர் வாகனச் சாரதியும், உதவியாளரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் »11






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெஹலிய, மஹிந்தவின் பெயர்களில் பாடசாலைகள்

## தவறான முன்னுதாரணம் என ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், பெப். 8

**கெஹலிய ரம்புக்வெல மற்றும் மஹிந்த ராஜபக்ச போன்றவர்களின் பெயர்களில் இயங்கும் பாடசாலைகளின் பெயர்களை மாற்றவேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
"உயிருடன் இருப்பவர்களின் பெயர்களை பாடசாலைகளுக்குச் சூட்டக்கூடாது என 1996ஆம் ஆண்டு கல்வியமைச்சு சுற்றுநிருபம் ஒன்றை அனுப்பியிருந்தது. ஆயினும் ஓர் ஆரம்பப் பாடசாலைக்கு முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. மஹிந்த ராஜபக்சவின் ஆட்சியில் பாடசாலை ஒன்றுக்கு அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளது. கல்வியமைச்சு உடனடியாக நடவடிக்கை எடுத்து, உயிருடன் இருப்பவர்களின் பெயரில் இயங்கும் பாடசாலைகளின் பெயர்களை மாற்ற வேண்டும்" - என்றார். (ச-6)

# இலங்கை அகதிகளுக்காக தமிழகத்தில் புதியவீடுகள்

சென்னை, பெப். 8
தமிழ்நாட்டில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ள இலங்கைத் தமிழர்களுக்காக தமிழகத்தின் வெவ்வேறு பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகள் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டுள்ளன.

தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்றுமுன்தினம் இந்த வீடுகளைத் திறந்துவைத்தார்.

இந்திய மதிப்பில் சுமார் 3.56 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் தமிழகத்திலுள்ள அகதிகள் முகாமிலுள்ளவர்களுக்காக புதுக்கோட்டை - தேக்காட்டூர் பகுதியில் 58 வீடுகளும் 2.03 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் எட்டயபுரம் - குளத்துள்வாய்பட்டியில் 40 வீடுகளும் மேலும் சிவகாசி ஆனைக்குட்டத்திலும் வீடுகள் அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# காணியை மீளக் கையகப்படுத்தல் எதிர்ப்பு நடவடிக்கைகளும் தீவிரம்

தெல்லிப்பழை, பெப். 8
வலிகாமம் வடக்கில் மக்களிடம் மீளக் கையளிக்கப்பட்ட நிலங்களிலிருந்து 500 ஏக்கரைச் சுவீகரிக்க இரகசிய முயற்சி இடம்பெறுவதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில் மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட குரும்பசிட்டி, கட்டுவன் மற்றும் குப்பிழான் வடக்குப் பிரதேசக் காணிகளைக் கையகப்படுத்தும் முயற்சிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் முயற்சியில் குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம் இறங்கியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை குரும்பசிட்டி கலைஞானி கலாசார மண்டபத்தில் ஆலோசனைக் கூட்டமொன்று இடம்பெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் அயற்கிராம அமைப்புகளும் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினர். இதற்கமைய இந்த விடயம் தொடர்பாகச் செயற்படுவதற்கான செயற்பாட்டுக் குழு அமைக்கப்பட்டது. அத்துடன் யாழ்.மாவட்டச் செயலர், வடக்கு மாகாண ஆளுநர், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் கவனத்துக்கு உடனடியாக கொண்டு செல்வதெனவும் முடிவெடுக்கப்பட்டது. (ஒ-66)

# பாண் எடை குறைப்பு; வர்த்தகர்கள் சிக்கினர்

கொழும்பு, பெப். 8
நிர்ணயிக்கப்பட்ட எடைக்குக் குறைவாகப் பாண் விற்பனை செய்த சுமார் 100க்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது என்று நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு நாள்களாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே அவர்கள் சிக்கினர். பாணின் நிர்ணயிக்கப்பட்ட எடைக்கான வர்த்தமானி வெளியிடப்பட்டதை அடுத்து, நுகர்வோர் விவகார அதிகாரசபை இந்தச் சோதனைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# கெஹலியவுக்கு அஞ்சலி மருத்துவருக்கு விடுதலை

கொழும்பு, பெப். 8
முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் இல்லத்தின் முன்னால் கடந்த ஜனவரி மாதம் மலர் வளையம் வைத்து அஞ்சலி செய்த சிவில் மருத்துவ உரிமைகளுக்கான தொழிற்சங்கத்தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவ விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கெஹலிய ரம்புக்வெலவின் இல்லத்தின் முன்பாக மலர் வளையம் வைத்து அஞ்சலி செய்தமை தொடர்பாக அவரது மகள் முறைப்பாடு ஒன்றை வழங்கியிருந்தார். எனினும் நீதிமன்றம் மருத்துவர் சஞ்சீவவைக் கைது செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்கவில்லை. குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போதே மருத்துவர் சஞ்சீவ கைது செய்யப்பட்டார். தற்போது மருத்துவர் சஞ்சீவ 25 ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ப-6)


# அதிக நிலுவை: மின் துண்டிப்பு!

மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தாத அதிக நிலுவையிலுள்ள மின்சாரப் பாவனையாளர்களின் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டு வருகின்றன என்று மின்சாரசபை வட்டாரங்கள் அறிவுறுத்தியுள்ளன.

இதுதொடர்பாக மின் அத்தியட்சகர் ஒருவர் தெரிவிக்கையில்,

5 ஆயிரம் ரூபாவுக்கும் குறைந்த கட்டணத்தைக் கொண்ட மூன்று மாத நிலுவையுடைய மின் பாவனையாளரின் மின்சாரம் துண்டிக்கப்பட்டு வருகிறது. அதுவே 5 ஆயிரம் ரூபாவுக்கு மேல் ஒரு மாதக் கட்டணமாக இருப்பின் 30 நாள்களுக்குள் செலுத்தாதவர்களின் மின் இணைப்பும் துண்டிக்கப்படும் - என்றார்.

அதேவேளை மின்கட்டணம் உயர்வையடுத்து ஒரு மாதக் கட்டணமே 5 ஆயிரம் ரூபாவுக்கு மேல் வருகிறது. பெறுமதிசேர் வரிச் சுமையுடன் மின்சாரக் கட்டணமும் சேர்த்து வதைக்கிறது. தற்போது பரீட்சைகள் நடைபெற்றுவரும் நிலையில் மின் துண்டிப்பால் மாணவர்களின் கல்விச் செயற்பாடும் பாதிப்புறும் என்றும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ச-555)



# முன்னாள் கடற்படைத்தளபதியும் சஜித் அணியுடன் இணைவு

இலங்கைக் கடற்படையின் 14ஆவது கடற்படைத் தளபதியாக இருந்து ஓய்வு பெற்ற அட்மிரல் தயா சந்தகிரி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளார்.

அவருக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் கடல்சார் மற்றும் கடற்படைக் கொள்கைகள் தொடர்பான ஆலோசகர் பதவி வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை, முன்னாள் இராணுவத் தளபதி தயா ரத்னாயக்கவும் அண்மையில் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-44)

# அத்தியாவசியப் பொருள்கள் விலை வரம்பு நிர்ணயம்!

கொழும்பு, பெப். 8
6 அத்தியாவசிய உணவுப்பொருள்களின் விலைகளைத் திருத்தி நுகர்வோர் விவகார அதிகாரசபை அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

நுகர்வோர் அதிக இலாபம் ஈட்டும் வகையில், விற்பனையாளர்களிடமிருந்து பொருள்களை கொள்வனவு செய்வதற்கு வழியேற்படுத்திய இந்த விலை வரம்புகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

அதன்படி செத்தல் மிளகாயின் மொத்த விலை கிலோ ரூ.870 ஆகவும், வெள்ளைச் சீனி கிலோ ரூ.265 ஆகவும், இறக்குமதி செய்யப்படும் உளுந்து கிலோ ரூ.900 ஆகவும், பெரிய வெங்காயம் கிலோ ரூ.320 ஆகவும், உருளைக்கிழங்கு கிலோ ரூ.120 ஆகவும், பருப்பு கிலோ ரூ.295 ஆகவும் விற்பனை செய்யப்படவுள்ளன. (ச-இ)

# 5 பேர் தமிழகத்தில் நேற்றுத் தஞ்சம்

படகு மூலம் அகதிகளாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 குழந்தைகள் உட்பட ஐந்து பேர் தனுஷ்கோடி கரையில் தஞ்சமடைந்துள்ளனர். தமிழ்நாடு இராமநாதபுரம் மாவட்டத்தின் தனுஷ்கோடி அருகே மணல் தீடையில் இவர்கள் நேற்று அதிகாலை இறக்கிவிடப்பட்டுள்ளனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று குழந்தைகள் உட்பட ஐந்து பேர் அங்கு கைவிடப்பட்டிருந்த நிலையில் அப்பகுதிக்கு மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் கடலோரப் பொலிஸார் மீட்டு விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர். (ஒ-100)

# மார்ச் 21 : மாலுமிகள் தினம்

கொழும்பு, பெப். 8
இலங்கையின் பொருளாதாரத்துக்குப் பங்களிக்கும் கடற்றொழிலாளர்களை அங்கீகரிக்கும் விதமாக மார்ச் மாதம் 21 ஆம் திகதி தேசிய மாலுமிகள் தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானசேவைகள் அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன்படி ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 21 ஆம் திகதி தேசிய மாலுமிகள் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# மாணவர்கள் மத்தியில் வன்முறை அதிகரிப்பு

**கொழும்பு, பெப். 8**

**பாடசாலை மாணவர்கள் மத்தியில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று உளவியல் மருத்துவர் ரூமி ரூபன் தெரிவித்துள்ளார்.**

தரம் ஆறு முதல் அதற்கு மேற்பட்ட தரங்களில் கற்கும் மாணவர்கள் மத்தியிலேயே மோதல்கள், வன்முறைகள் அதிகரித்துள்ளன.

தற்பொழுது தரம் ஆறு மற்றும் அதற்கு மேற்பட்ட வகுப்புகளில் கற்கும் மாணவர்கள் பெற்றோரின் சொல்லைக் கேட்காமல் மிகவும் கோபமாக நடந்து கொள்கின்றனர் என்பது தெரிய வந்துள்ளது. சமூக ஊடகங்களில் வன்முறைக் காட்சிகளை பார்வையிடுவதன் மூலமும் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுவதாகத் தெரியவருகிறது.

பிள்ளைகள் தொடர்பில் பெற்றோர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## மருத்துவர் சிவசுதன் இடமாற்றம்

யாழ்ப்பாணம், பெப். 8

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியக பதில் சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் க. சிவசுதன் அம்பன் மருத்துவ மனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவரின் இடத்துக்கு மருத்துவர் ஜீ. சாயிகேசன் நியமிக்கப்பட்டுள்ளார். (ச-9)

## 4 கோடி ரூபா பெறுமதியான சிகரெட் கடத்தல் இருவர் சிக்கினர்

கொழும்பு, பெப். 8

சுங்கவரி செலுத்தாமல் கடத்திச் செல்லப்பட்ட நான்கு கோடி ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளை எடுத்துச் சென்ற இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு, பெரியமுல்ல பிரதேசத்தில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பில் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து சுமார் 4 இலட்சம் சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. சிகரெட்களை ஏற்றிச் சென்ற லொறியும் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)



## கசிப்புடன் கைது

யாழ்ப்பாணம், பெப். 8

மாதகல், சகாயபுரத்தில் ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்புடன் 49 வயதான ஒருவரை அவரது வீட்டில் வைத்து இளவாலைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஒ-125)

## சுன்னாகம் பொலிஸார் திடீர் வீதிச் சோதனை!

யாழ்ப்பாணம், பெப். 8

குப்பிழான் விவசாய சம்மேளனத்தை அண்டிய குப்பிழான் தெற்குப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை பொலிஸாரால் திடீர் வீதிச்சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது வீதியால் போக்குவரத்துச் செய்தவர்களை இடைமறித்துப் பொலிஸார் துருவித் துருவி விசாரணை செய்ததுடன் அவர்களின் உடைமைகளையும் சோதனை செய்துள்ளனர். (ம-66)

## 'எக்கோ' நிபுணர்கள் இன்மையால் பாதிப்பு

கிளிநொச்சி, பெப். 8

கிளிநொச்சி மருத்துவமனையில் 'எக்கோ' நிபுணர் இல்லாமையால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அவசர நிலைமைகளில் நோயாளர்களை யாழ்ப்பாணம் அல்லது வவுனியா மருத்துவமனைக்கு 'எக்கோ' பரிசோதனைக்காகக் கொண்டுசெல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

மன்னார் மாவட்ட மருத்துவமனையிலிருந்து கிளிநொச்சி மருத்துவமனைக்கு இடமாற்றப்பட்ட 'எக்கோ' நிபுணர், மருத்துவமனைக்கு வருகை தராமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-113)

## வீதியைப் புனரமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

வன்னேரிக்குளம், பெப். 8

முல்லைத்தீவு- இரணைப்பாலைக்கும் தேவிபுரத்துக்கும் இடையிலான வீதியைப் புனரமைக்குமாறு மக்கள் கோருகின்றனர்.

இரணைப்பாலை செந்தூரன் சிலையடியிலிருந்து தேவிபுரம் பக்கமாக 4 கிலோ மீற்றர் வீதி புனரமைக்கப்பட்டுள்ளது. மிகுதி 2 கிலோ மீற்றர் வீதி புனரமைக்கப்படாமல் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. அதைப் புனரமைக்குமாறே கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-13)

## தினம் தெரியுமோ?

இப்பத்தைக் காலத்தில எல்லாமே கையுக்க அடங்கிட்டுது. ஒரு போனிலையே எல்லா வேலையையும் பார்த்து முடிச்சுப்போடலாம். கரண்ட் பில் கட்டுறதில இருந்து எல்லாக் குடுக்கல் வாங்கலையும் போனிலைதான் கனபேர் செய்யினம். கொஞ்சநாளில வெளிநாடுகள் மாதிரி இங்கையும் வீட்ட இருந்தபடியே வெளி அலுவல் எல்லாத்தையும் செய்யக்கூடிய காலம் வந்திடும். கொரோனா காலத்துக்கு முதலே இப்பிடி சனங்கள் ஒவ்வொரு கச்சேரி மட்டும் ஏறி இறங்காமல், தங்களுக்கும் பக்கத்தில இருக்கிற பிரதேச செயலகத்திலையே தேவையளைச் செய்து முடிக்கிற மாதிரி திட்டங்களை அரசாங்கம் கொண்டு வந்தது. அதில ஒண்டுதான் பிறப்பு, இறப்புச் சான்றிதழ்களை பிரதேச செயலகங்களில எடுக்கிற முறை. நாட்டில இருக்கிற எந்தப் பிரதேச செயலகத்துக்குப் போனாலும், எங்கட பிறப்பு, கலியாணச் சேர்ட்டிபிக்கட்டுகளை ஆகக்கூடினது அரை மணித்தியாலத்துக்க எடுக்கலாம் எண்டு அறிவிச்சவை.

ஆனால் பேச்சுப் பல்லக்கு, பொடியன் பொடிநடை எண்ட கணக்கில, சில பிரதேச செயலகங்களில உந்த சேர்ட்டிபிக்கட்டுகளை எடுக்க ஏலாமல் இருக்கு. 'பிரிண்டர் பிழைச்சுப் போட்டுது', 'கரண்ட் கட்', 'உங்கட டொக்கிமெண்ட்ஸ் இன்னும் ஒன்லைன்ல ஏத்தேலை', இண்டைக்கு எங்களுக்கு இன்ரர்நெற் வேலை செய்யேலை' எண்டு ஒவ்வொரு சாட்டுகளைச் சொல்லி சனத்தை அலைக்கழிக்கிறதிலையே குறியா இருக்கினம் எங்கட ஒப்பீஸர்மார். கிட்டடியில வெளிமாவட்டத்தைச் சேர்ந்த ஒராளின்ர சேர்ட்டிபிக்கெட் எடுக்க யாழ்ப்பாணத்தில உள்ள பிரதேச செயலகம் ஒண்டுக்கு ஒராள் போயிருக்கிறார். அங்க 'இது வெளிமாவட்ட சேர்ட்டிபிக்கெட். இதை அந்த மாவட்டத்தில தான் எடுக்க வேணும். எங்கட மாவட்டத்துக்குள்ள பதிவுள்ள சேர்ட்டிபிக்கெட்டுகளைத்தான் இஞ்ச எடுக்கலாம்'எண்டு அங்க இருந்தவை சொல்லியிருக்கினம். 'சரி நான் தான் நடைமுறை விளங்காமல் வந்திட்டன்போல' எண்டு தனக்குத்தானே ஏசிக்கொண்டு அவர் வெளிக்கிட்டு, 300 கிலோமீற்றருக்கு அங்கால இருக்கிற தன்ர சொந்தமாவட்டத்துக்குப் போக ரெடியாகி இருக்கிறார். இப்பிடி திடீரெண்டு சொந்த மாவட்டத்துக்கு போற விசயத்தை ப்ரெண்ட் ஒராளுக்கு அவர் போன் பண்ணிச் சொல்ல, 'எதுக்கும் ஒருக்கா இன்னொரு பிரதேச செயலகத்தில கேட்டுப்பார், ஏனெண்டால் நாடு முழுக்க எங்கையும் எந்த ஏரியாவின்ர சேர்ட்டிபிக் கெட்டும் எடுக்கலாம் எண்டதுதான் நடைமுறை' எண்டு அந்த ப்ரெண்ட் சொல்லியிருக்கிறார். இவரும் நம்பிக்கையில்லாமல் ரவுணுக்கு கிட்ட உள்ள ஒரு பிரதேச செயலகத்துக்குப் போனால், அங்க அரை மணித்தியாலத்தில அவர் கேட்ட சேர்ட்டிபிக்கெட்டை கையில குடுத்திருக்கினம்.

எக்கனம் அவர் இஞ்ச எடுக்கேலாது எண்டு முதல் இன்னொரு பிரதேச செயலகத்தில சொன்னதை நம்பி, சொந்த மாவட்டத்துக்குப் போயிருந்தால் ரண்டு நாள் வீணாயிருக்கும், அதோட போய் வாற காசும் அநியாயமா வெல்லோ போயிருக்கும். ஒரு வேலைக்கு வந்தால் அதைப்பற்றி சரியாத் தெரியோணும், தெரியாட்டி அதை அறிஞ்சு கொள்ளவாவது முயற்சிக்கோணும். அதைவிட்டிட்டு எல்லாம் தெரிஞ்ச ஏகாம்பரம் மாதிரி சனத்தை அலைக்கழிக்கக்கூடாது. அரைகுறை வேலை தெரிஞ்சவையால இப்பிடி இன்னும் எத்தினை பேர் அலையினமோ?



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முருங்கைக்கு கிராக்கி

யாழ். மாவட்டச் சந்தைகளில் முருங்கைக்காய்க்கு கிராக்கியும் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது என்று நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

முருங்கைக்காய் சந்தைக்கு வருவது குறைவடைந்துள்ளதுடன் தென்மராட்சிப் பிரதேச சந்தைகளுக்கு கொண்டு வரப்பட்ட முருங்கைக்காய்களை ஏனைய சந்தைகளின் வியாபாரிகள் கொள்வனவு செய்வதையடுத்து அவற்றுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

தற்போது முருங்கைக்காய் கிலோ 2 ஆயிரம் ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகிறது என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-9)

# தென்னைகளில் மீள 'வெள்ளை ஈ' வீரியம்!

யாழ்ப்பாணம், பெப். 8

**தற்போதைய காலநிலை வேறுபாட்டையடுத்து மீண்டும் தென்னைகளில் வெள்ளை ஈக்களின் தாக்கம் வேகமாக பரவி வருகின்றது.**

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளில் இந்தத் தாக்கம் அதிகளவில் பதிவாகியுள்ளது.

இதனால் தென்னை மரங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன என்று செய்கையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை இந்த நோயை விரைவாகக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் இதன் தாக்கம் கூடுதலாகக் காணப்பட்டபோதிலும் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தப்பட்டது என்று தென்னை அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது. (ச-17)



## காயமடைந்த குடும்பஸ்தரை இனங்காட்டிய வளர்ப்பு நாய்!

முல்லைத்தீவு, பெப். 8

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் வெடியில் சிக்கி காயமடைந்த குடும்பத்தலைவரை, அவரது வளர்ப்புநாயே இனங்காட்டி மீட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

காட்டுக்குள் காயமடைந்த நிலையில் உள்ள குடும்பத்தலைவரைப் பார்த்த நாய், அவரது குடும்பத்தினரிடம் வந்து தனது எஜமான் காயமடைந்திருப்பதை சைகைகளால் வெளிப்படுத்தியுள்ளது. இதையடுத்தே குடும்பத்தினர் அங்குசென்று காயமடைந்தவரை மீட்டு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

காயமடைந்த குடும்பத்தலைவரான பழனி வடிவேல் (வயது - 66) காயத்தின் தீவிரத் தன்மை காரணமாக பின்னர் உயிரிழந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-19)

# கச்சதீவுப் பெருவிழாவுக்கு முன்னேற்பாடுகள் தீவிரம்!

யாழ்ப்பாணம், பெப். 8

வரலாற்றுச் சிறப்புமிக்க கச்சத்தீவு புனித அந்தோனியார் தேவாலயப் பெருவிழாவுக்கான முன்னேற்பாடுகள் தற்போது தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

2024 ஆம் ஆண்டுக்கான கச்சதீவுப் பெருவிழா எதிர்வரும் 23 ஆம் மற்றும் 24 ஆம் திகதிகளில் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில், திருவிழாவுக்கு வரும் பக்தர்களின் நலன் கருதி பல்வேறுபட்ட முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேராவின் உத்தரவுக்கமைய, வடகடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் காஞ்சன பனாகொடவின் மேற்பார்வையின் கீழ், உட்கட்டமைப்புப் பணிகளில் கடற்படை ஈடுபட்டுள்ளது. (ம-27-125)

# வெங்காயப்பூ விலை சரிவு!

யாழ்ப்பாணம், பெப். 8

யாழ்.குடாநாட்டில் வெங்காயப்பூவின் விலை திடீரென சரிந்துள்ளது.

பெரும்போகத்துக்கான வெங்காயச் செய்கை அறுவடை தற்போது ஆரம்பிக்கப்பட் டுள்ளது.

இந்தநிலையில் வெங்காயப்பூ கூடுதலாக சந்தைக்கு வருகின்றது.

அதனையடுத்து கிலோ 600 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட வெங்காயப்பூ தற்போது கிலோ 200 ரூபாவாக சரிந்துள்ளது என்று செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-17)

# இணையவழி கலந்துரையாடல்

கொழும்பு, பெப். 8

கொழும்பைச் சேர்ந்த சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு நடத்தும் 'கிழக்கில் இந்திய மேலாதிக்கம்' எனும் தொனிப் பொருளிலான இணையவழிக் கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ப-66)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரிய அனுகூலமான நாள். புதிய முயற்சிகளை மேற்கொள்வதற்கு உகந்த நாள். தேவையான பணம் கையில் இருப்பதால் செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். மனதில் இனம் தெரியாத சோர்வு உண்டாகலாம். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமாக நடந்துகொள்ளவும். உடல்நலனில் கவனம் தேவை.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. செலவுகள் ஏற்படும். மற்றவர்களுடன் வீண் விவாதம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது. உடல்நலனில் கவனம் செலுத்தவும்.

**கடகம்:** உறவுகளால் சங்கடம் ஏற்படக்கூடும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களால் சிலருக்கு எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டாகும்.

**சிம்மம்:** அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். காரியங்கள் அனுகூலமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கன்னி:** சுறுசுறுப்பாகச் செயல்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**துலாம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். முக்கியமான முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம். உடல் நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உற்சாகமாகப் பேசி மகிழ்வீர்கள்.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். சகோதர வகையில் எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். தேவையற்ற செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**மகரம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாக முடியும். தாயின் உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு சிறிய அளவில் ஆரோக்கியக்குறைவு ஏற்பட்டு சரியாகும். பேசும்போது வீண் மனவருத்தம் ஏற்படலாம்.

**கும்பம்:** பொறுமையுடன் இருக்கவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து முடிவெடுப்பது நல்லது. செலவுகள் ஏற்படக்கூடும். தட்சிணாமூர்த்தி வழிபாடு நன்று.

**மீனம்:** கருத்துவேற்றுமை நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். காரியங்களில் வெற்றி உண்டாகும். புதிய முயற்சிகளை தொடங்குவது நல்லது.

# நூல் வெளியீடு

கிளிநொச்சி, பெப். 8

தமிழ்த் தேசியக் கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் ஈழத்தின் மூத்த எழுத்தாளர் யோகேந்திரநாதன் எழுதிய '34 நாட்களில் நீந்திக்கடந்த நெருப்பாறு' எனும் நூல் வெளியீடு, கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேசசபை மண்டபத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கரைச்சிப் பிரதேச தமிழ்த் தேசிய கலை இலக்கியப் பேரவையின் செயலாளர் எழுத்தாளர் தீபச்செல்வன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் விருந்தினர்களாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சி.சிறீதரன், மகாதேவா ஆச்சிரம நிலையத் தலைவர் சி.மோகனபவன், இலங்கை குமரித் தமிழ்ப்பணி மன்றத் தலைவர் நா.வை.மகேந்திரராசா, கே.எஸ்.ஆர்.இயக்குநர் பண்டிதர் பரந்தாமன், கலைக்கல்லூரி கே.செளந்தர்ராஜன், ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய அதிபர் சி.நாகேந்திரராசா, கரைச்சிபிரதேசசபை முன்னாள் தவிசாளர் அ.வேழமாலிகிதன், ஆசிரியர் ஆ.இராஜேந்திரகுமார், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கை கிளைத் தலைவர் அ.சத்தியானந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இதுதான் இந்தியாவின் உண்மைமுகம்

இலங்கையின் ஆட்சியாளர்களை எப்போதும் தமது கைப்பிடிக்குள் வைத்திருப்பதற்கு காலத்துக்குக் காலம் இந்தியா ஒவ்வொரு பிரச்சினைகளை கையிலெடுப்பது வழமை. 1980ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவுடன் முறுகல் நிலைமையிலிருந்தது இந்தியா. இலங்கையின் ஆட்சியாளர்களோ, அமெரிக்காவுடன் நெருக்கமாக இருந்தனர். அப்போது இலங்கைக்குள் துளிர்விட்டுக்கொண்டிருந்த, தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு வலுச்சேர்ப்பதாகக் கூறி ஆயுதங்கள் வழங்கி, பயிற்சி கொடுத்தது இந்தியா. தமிழ்ப் போராட்ட இயக்கங்களை வளர்த்தெடுப்பதன் ஊடாக இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தங்களைப் பிரயோகித்தது. இந்தியா தான் நினைத்த இலக்கை அதனூடாக அடைந்தது. இந்திய - இலங்கை ஒப்பந்தம் பிரசவமானது. இந்தியா தனது பாதுகாப்பு நலனை உறுதிப்படுத்திக்கொண்டது. குறிப்பாக அமெரிக்காவின் பிரசன்னத்தை இலங்கையில் இல்லாமல் பார்த்துக் கொண்டது. இந்திய -இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக தமிழர்களின் நலன் உறுதிப்படுத்தப்படவில்லை. ஆனால் அதைப்பற்றியெல்லாம் இந்தியா கவலைப்படவில்லை. தனதுநாட்டின்பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொண்டால் போதுமென்றதோடு அது ஒதுங்கிக்கொண்டது.

இப்போது இலங்கையின் ஆட்சியாளர்கள், இந்தியாவின் மற்றொரு பரமவைரியான சீனாவை அரவணைக்கின்றனர். சீனாவுக்கு இலங்கையின் கதவு அகலத்திறந்து விடப்பட்டிருக்கின்றது. இந்தியாவின் பாதுகாப்பு கேள்விக்குறியாகின்றது. இலங்கையைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு இந்தியா பல வழிமுறைகளைக் கையாண்டு கொண்டிருந்தாலும் இன்னமும் அந்த முயற்சியில் வெற்றிபெற முடியவில்லை. பொருளாதார நெருக்கடி உச்சம் பெற்றிருந்த காலத்தில் இந்தியா முதலாவது ஆளாக இலங்கைக்கு உதவிகளை அள்ளி வழங்கியது. உதவிகளைப் பெற்ற மறுகணமே இலங்கை அதை மறந்துவிட்டது. சீனாவுக்கு வெற்றிலைகொடுத்து வரவேற்கின்றது. இதனால் இந்தியா தனது அணுகுமுறைகளை கொஞ்சம் கொஞ்சமாக மாற்றிக்கொள்ள ஆரம்பித்திருக்கின்றது. ஆரம்பத்தில் இலங்கைத் தமிழர் விவகாரத்தைக் கையிலெடுத்து ஆட்சியாளர்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த இந்தியா, இப்போது சிங்களவர்களைக் கைக்குள்போடுவதன்ஊடாக, ஆட்சிக்குதமக்கு வேண்டியவர்களைக் கொண்டு வருவதற்கு முயல்கின்றது. ஆட்சியாளர்களைத் தாமே தீர்மானிப்பதன் ஊடாக இலங்கையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியும் என்று அது நம்புகின்றது.

இந்தியாவின் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இலங்கைக்கு வந்திருந்தபோது கண்டிக்குச் சென்று மகாநாயக்க தேரர்களைச் சந்தித்திருந்தார். விகாரைகளுக்கு நிதியுதவி வழங்குவதாகவும் உறுதியளித்திருந்தார். இப்போது இலங்கையில், இந்திய எதிர்ப்புவாதத்தை எப்போதும் விதைத்துக்கொண்டிருக்கும் மக்கள் விடுதலை முன்னணி என்ற ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவை புதுடில்லிக்கு அழைத்துப் பேச்சு நடத்தியிருக்கின்றது. இந்தியா தனது அணுகுமுறைகளில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது என்ற செய்தியை பகிரங்கமாகச் சொல்லியிருக்கின்றது. அதே போன்று இப்போதைய ஆட்சியாளர்களை நோக்கியும் எச்சரிக்கையை விடுத்திருக்கின்றது. இவர் அல்லது அவர் என்ற நிலைப்பாட்டில்லாமல் எவரையும் அரவணைத்து தமக்குத் தேவையானதைப் பெற்றுக்கொள்வோம் என்பதைச் சொல்லாமல் சொல்லியிருக்கின்றது இந்தியா.

இங்கு ஈழத்தமிழர்களுக்கும் சில செய்திகளை இந்தியா சொல்லியிருக்கின்றது. 'உங்கள் விவகாரத்தை நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள். எங்களது தேவைகளுக்குத்தான் உங்கள் விவகாரங்கள். ஈழத்தமிழர் விவகாரத்தை முன்வைத்து இலங்கையின் ஆட்சியாளர்களை அசைக்கமுடியாதபோது உங்கள் விடயத்தை கைவிட்டுவிடுவோம்' என்பதுதான் அவர்களின் செய்தி. இனியாவது 'இந்தியா, இந்தியா' என்று தொங்கிக் கொண்டிருக்காமல் தமிழ் அரசியல் தலைமைகள் தங்களின் நடவடிக்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்தட்டும்.



## நாட்டை மீட்டெடுப்பதற்கு புதிய சட்டங்கள் தேவை

### ஜனாதிபதி சுட்டிக்காட்டு

**கொழும்பு, பெப். 8**

**நாம் மீண்டும் மீண்டும் கடன் வாங்கி மீண்டும் பிச்சைக்காரர்களின் தேசமாக மாற முடியாது. எதிர்காலத்தில் இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய மேலும் பல சட்டங்களைக் கொண்டு வர எதிர்பார்க்கின்றோம் - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

10 ஆயிரம் விவசாயிகளுக்குக் காணி உறுதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தின் ஊடாக நாட்டைக் கட்டியெழுப்பும் சவாலை நாம் எதிர்கொண்டோம். எமது நாடு தற்போது படிப்படியாக மீண்டு வருகிறது. இந்த நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். எம்மால் முடிந்தளவு மக்கள் அனைவருக்கும் நிவாரணம் வழங்கினோம். அதற்காக 'அஸ்வெசும' திட்டத்தை செயற்படுத்துகிறோம். அரச ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்தவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். நாம் ஆரம்பித்த இந்தப் பயணத்தைத் தொடர்ந்தால், 2025ஆம் ஆண்டில் 5 வீத பொருளாதார வளர்ச்சியை எட்டுவதற்கான வாய்ப்பு உள்ளது - என்றார். (ச-இ)

## 50 நாள்களில் 56,541 கைது!

'யுக்திய' சுற்றிவளைப்பு ஆரம்பமாகி நேற்றுடன் 50 நாள்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில், குறித்த காலப்பகுதிக்குள் 56 ஆயிரத்து 541 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இந்தச் சுற்றிவளைப்புகளின் போது 142 கிலோ 541 கிராம் ஹெரோய்ன், 208 கிலோ 290 கிராம் ஐஸ், 974 கிலோ 605 கிராம் கொக்கெய்ன் ஆகிய போதைப் பொருள்கள் பாதுகாப்புத் தரப்பால் கைப்பற்றப்பட்டுள்ளன. போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான ஆயிரத்து 981 பேர் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## புலம்பெயர் தேசத்திலும் எதிர்ப்புப் போராட்டம்

பேர்ளின், பெப். 8

இலங்கையின் சுதந்திரதினத்தை புறக்கணிக்கும் முகமாக ஜேர்மனின் தலைநகர் பேர்ளின் உள்ள பிரிட்டன் தூதரகத்தின் முன்னால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலைக்கு மத்தியிலும் தமிழின உணர்வாளர்கள் ஒன்றுகூடி அடையாள கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். போராட்டத்தின் முடிவில் பிரிட்டன் தூதரகத்திடம் மனுவும் கையளிக்கப்பட்டது. (ஒ-இ)

## மருத்துவமனைகளுக்கு சூரிய மின்சக்தி

### ஜப்பான் நிதியுதவி

புதுப்பிக்கத்தக்க வலுசக்திப் பாவனை மூலம் இலங்கையிலுள்ள மருத்துவமனைகளின் மின்சார விநியோகத்தை ஸ்திரப்படுத்துவதற்கு நிதியுதவியளிக்க ஜப்பான் அரசு சம்மதம் தெரிவித்துள்ளது. அதன்படி ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவரகம் ஊடாக சுமார் 2.8 பில்லியன் ரூபா வழங்கப்படவுள்ளது. ஜப்பான் அரசாங்கத்திடம் இந்த உதவியைப் பெறுவதற்கான யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ச-இ)

## அமர்வில் பங்கேற்க விரும்பாத கெஹலிய

நாடாளுமன்றத்தின் புதிய அமர்வு நேற்று ஆரம்பமாகிய நிலையில் அதில் பங்கேற்க கெஹலியவுக்கு அனுமதி வழங்கப்பட்ட போதிலும் அவர் பங்கேற்க மறுத்துள்ளார் என்று சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை பங்கேற்க அனுமதிக்குமாறு சபாநாயகர் சிறைச்சாலைத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார். ஆனால் கெஹலிய அமர்வில் பங்கேற்க விரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

**நாளை**

09.02.2024

**வெள்ளிக்கிழமை**

**தை – 26**

சுபநேரம் : 06.35 - 08.05


ராகுகாலம் : 11.05 - 12.35

**நாளொரு நல்வார்த்தை**

ஒரு சதவீதம் உத்வேகமும்
தொண்ணூற்று ஒன்பது சதவீதம்
வியர்வையும் சேர்ந்ததே மதிநுட்பம்.

-தோமஸ் அல்வா எடிசன் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிலியின் முன்னாள் அதிபர் ஹெலி விபத்தில் இறப்பு!

சான்தியாகோ, பெப். 8
தென்னமெரிக்க நாடான சிலியின் முன்னாள் ஜனாதிபதி செபஸ்டியன் பினேரா ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்துள்ளார். பெரும் பணக்காரரான இவர் இரண்டு முறை சிலி நாட்டின் ஜனாதிபதியாக பதவி வகித்துள்ளார்.
சிலியின் பிரபல சுற்றுலாத் தலமான லகோரங்கொ பகுதிக்கு செபஸ்ரியன் பினேரா தனது சொந்தக் ஹெலிக்கொப்டரை செலுத்திச் சென்றுள்ளார். அந்தக் ஹெலிக்கொப்டரில் செபஸ்ரியன் பினேரா உள்ளிட்ட நால்வர் பயணித்துள்ளனர். ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளானதில் பினேரா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவரின் மறைவு சிலி நாட்டுக்கும் அதன் பொருளாதாரத்துக்கும் பேரிழப்பு என்று பலரும் சுட்டிக் காட்டியுள்ளனர். (ம)

## தேர்தல் முடிவுகளில் தலையீடு

# ட்ரம்ப்புக்கு எதிராக வழக்குப் பாயலாம்




**வொஷிங்டன், பெப். 8**
**தேர்தலை மாற்றியமைக்கச் சதிமுயற்சிகளில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில், அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு எதிராக வழக்குத் தொடரலாம் என்று அமெரிக்க உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.**

2020ஆம் ஆண்டு நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சியின் வேட்பாளரும், அப்போதைய ஜனாதிபதியாகவும் இருந்த ட்ரம்பை எதிர்த்து ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரான பைடன் போட்டியிட்டு தேர்தலில் வெற்றிபெற்றார்.
தேர்தலின்முடிவை ஏற்க மறுத்த ட்ரம்ப் சரமாரியான விமர்சனங்களை முன்வைத்தார். இதனால் தேர்தல் முடிவுகளில் தலையீடு செய்ய எத்தனித்தார் என்று குறிப்பிட்டு ட்ரம்புக்கு எதிராக வழக்குத் தொடரப்பட சந்தர்ப்பங்கள் இருந்தன. இதனால், ஜனாதிபதியாக பதவிவகித்த காலத்தில் தான் முன்னெடுத்த நடவடிக்கைகளுக்காக தனக்கு எதிராக குற்றவியல் குற்றச்சாட்டுகளைச் சுமத்தமுடியாது என ட்ரம்ப் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.
ட்ரம்பின் அரசியலையும் குடியரசுக் கட்சியின் அரசியலையும் தீர்மானிக்கக்கூடிய இந்த வழக்கு வரலாற்று முக்கியத்துவம் மிக்கதாகக் கருதப்பட்டது. இந்த நிலையிலேயே, நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.
'முன்னாள் ஜனாதிபதி என்பதற்காக, குற்றவியல் விடயங்களில் எந்த விட்டுக்கொடுப்புக்கும் சமரசத்துக்கும் இடமில்லை' என்று நீதிமன்றம் தன் தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளது. இந்தத் தீர்ப்புக்கு எதிராக ட்ரம்ப் மேன்முறையீடு செய்தால், வழக்கு உச்ச நீதிமன்றத்துக்குச் செல்லும். அமெரிக்க உச்சநீதிமன்ற நீதிபதிகள் மத்தியில் பழைமைவாதிகளின் ஆதிக்கம் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## சார்ள்ஸ் மன்னர் மக்களிடம் மன்னிப்பு

கொழும்பு, பெப். 8
பிரிட்டன் மன்னர் சார்ள்ஸ், மக்களிடம் மன்னிப்புக்கேட்டுக் கொண்டுள்ளார் என்று பக்கிங்காம் அரண்மனை தெரிவித்துள்ளது.
புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள இவர், தனது உடல்நல பாதிப்புக்கு சிகிச்சை பெற்று வருவதால் எதிர்வரும் நாள்களில் நடைபெறவுள்ள சில பொது நிகழ்ச்சிகளை இரத்து செய்ய முடிவு செய்துள்ளார்.
அதனையடுத்தே சார்ள்ஸ் அனைவரிடமும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டுள்ளார். (ச-இ)



## சிறந்த வனவிலங்கு புகைப்படம் பிரிட்டன் கலைஞர் முதலிடம்

உரோம், பெப். 8
இந்த வருடத்துக்கான சிறந்த வன விலங்கு புகைப்படக் கலைஞர்கள் விருதை பிரிட்டனைச் சேர்ந்த சுயாதீன புகைப்படக் கலைஞர் நிமா சரிகானி பெற்றுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்த விருதை லண்டனிலுள்ள இயற்கை வரலாற்று அருங்காட்சியகம் (Natural History Museum) வழங்குகிறது.
நிமா சரிகானி ஒரு அமைதியான சூழலில் இளம் துருவ கரடி பனிப்பாறையில் உறங்கும் காட்சியை புகைப்படம் எடுத்துள்ளார்.
இந்தப் புகைப்படம் சுற்றுச்சூழலின் அழகு, பாதிப்பு மற்றும் பாதுகாப்பு முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.
நிமா சரிகானி நோர்வேயின் ஸ்வால்பார்ட் தீவுக்கூட்டத்தில் அடர்ந்த மூடுபனி வழியாக துருவக் கரடிகளைத் தேடி மூன்று நாள்கள் மேற்கொண்ட பயணத்தை தொடர்ந்து இந்தப் புகைப்படத்தைப் பிடித்துள்ளார். (ச-இ)



## சிலியில் காட்டுத்தீ: 140 பேர் உயிரிழப்பு

சான்தியாகோ, பெப். 8
சிலி நாட்டில் காட்டுத்தீ தீவிரமாகப் பரவிவரும் நிலையில், இதனால் 140 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சிலி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
சிலி வால்பரைசோவின் மத்தியப் பகுதியில் காட்டுத்தீ பரவி வருவதோடு, உயிரிழப்புகள் அதிகரிக்கலாம் என அந்த நாட்டு ஜனாதிபதி கபிரியேல் போரிக் ஞாயிற்றுக்கிழமை எச்சரித்திருந்தார். அத்துடன், நாடு 'மிகப்பெரிய அளவிலான சோகத்தை' எதிர்கொள்வதாகவும் குறிப்பிட்டு, அவசரகால நிலையையும் அறிவித்தார்.
காட்டுத்தீயினால் கடற்கரை சுற்றுலாத் தளமான வினாடெல்மார் நகரிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் 200 பேர் காணாமல் போயுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ம)

## குடும்பத்தை இழந்தபின்னும் இடைவிடாத ஊடகப்பணி!

### காஸா பத்திரிகையாளருக்கு உயர் விருது அறிவிப்பு

டெல்அவிவ், பெப். 8



இஸ்ரேல் - ஹமாஸ் போரில் தனது இரண்டு குழந்தைகளை இழந்த பின்னும் களத்தில் நின்ற செய்தியாளருக்கு சிறந்த பத்திரிகையாளருக்கான விருது வழங்கி கேரள அரசு கௌரவிக்க உள்ளது.
இஸ்ரேல் - ஹமாஸ் போர் ஆரம்பித்ததில் இருந்தே ஏராளமான செய்தியாளர்கள் களத்தில் இருந்து போர் தொடர்பான செய்திகளை எடுத்துக் கூறி வருகின்றனர். அந்த வகையில் காஸா பகுதியைச் சேர்ந்த பலஸ்தீன பத்திரிகையாளர் வாயில் அல் தஹ்துத் என்பவரின் பணி அளப்பெரியதாக உள்ளது.
இந்தப் போரில் தஹ்துத்தின் மனைவி, இரண்டு குழந்தைகள் உட்பட அவரது உறவினர்கள் ஏராளமானோர் உயிரிழந்துள்ளனர். ஆனாலும், களத்தில் இருந்து செய்திகளை வெளியிடுவதில் இருந்து பின்வாங்காமல் தஹ்துத் தொடர்ந்து பணியாற்றி வருகின்றார்.
கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு நடந்த ஏவுகணை தாக்குதலின்போது இவருடன் பணியாற்றிவந்த ஒளிப்பதிவாளர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். உடனே அவரிடம் இருந்து கீழே விழுந்த கமராவை எடுத்து, அந்த சம்பவத்தை தஹ்துத் பதிவு செய்தார். இதில் அவர் படுகாயம் அடைந்ததையடுத்து தற்போது கட்டாரில் உள்ள மருத்துவமனையில் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## 5 ஆண்டுகளாக கோமா: குணமாக்கிய தாயின் பகிடி

கொழும்பு, பெப். 8
ஐந்து வருடங்களாக கோமாவிலிருந்த அமெரிக்காவைச் சேர்ந்த பெண்ணொருவர் தாயின் நகைச்சுவையைக் கேட்டு சிரித்தபடி கோமாவிலிருந்து விழித்தெழுந்துள்ளார்.
ஜென்னிஃபர் எனும் பெண் கடந்த 2017ஆம் ஆண்டு இடம்பெற்ற சாலை விபத்தில் சிக்கியதில் கோமா நிலைக்குச் சென்றார். மருத்துவர்கள் தொடர்ந்து சிகிச்சை அளித்து வந்தனர்.
இந்தநிலையில் ஜென்னிஃபரின் தாய் கோமாவிலிருந்த தன் மகளிடம் நகைச்சுவையாக பேசிக்கொண்டிருந்தபோது அவர் திடீரென மெதுவாகச் சிரித்ததைப் பார்த்து அதிர்ச்சியடைந்துள்ளார். அதன்பின் நாளுக்கு நாள் மெதுவாக அவர் குணமடைய ஆரம்பித்துள்ளது அவரை நெகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதிகளில் நெல் உலரவிடல்: வாகனச் சாரதிகளுக்குப் பாதிப்பு

அறுவடை செய்த நெல்லை கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் விவசாயிகள் வீதிகளிலே உலர விடுவதன் காரணமாக வாகனச் சாரதிகள் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

கடந்த காலங்களில் வீதிகளில் நெல் உலர விடுவதன் காரணமாக மூவர் உயிரிழந்திருந்தனர்.

மேலும் நேற்றுமுன்தினம் இரவும் கிளிநொச்சி நோக்கிப் பயணத்த உழவியந்திரமும் பரந்தனிலிருந்து பயணித்த மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகியிருந்தன. நெல் உலர விடுவதற்கான மேடை அமைக்கப்படுவதன் ஊடாக இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-13)

## தவறவிடப்பட்டுள்ளது

மீசாலை கிழக்கு மீசாலையைச் சேர்ந்த வேலாயுதம் புண்ணியமூர்த்தி என்பவரது தேசிய அடையாள அட்டை, வாகன ஓட்டுநர் அனுமதி அட்டை, கிளினிக்கொப்பிகள், தொலைபேசி, ஒரு தொகைப்பணம் அடங்கிய கறுப்புநிற கைப்பை யாழ்ப்பாணத்திற்கும் கச்சேரிக்கும் இடையில் ஓட்டோவில் வரும் போது தவறிவிழுந்துவிட்டது.

தயவு செய்து கண்டு எடுத்தவர்கள்
**074 217 8864** எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு தந்து உதவுமாறு அன்பாக கேட்டுக்கொள்கின்றோம். **தகுந்த சன்மானம் வழங்கப்படும்**

(cr.41750) (N-1)

## நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
## கடைத் தொகுதி வாடகைக்கு விடல்

மேற்படி சங்கத்தின் களஞ்சியம் அமைந்துள்ள காணியின் மேற்குப் புறமாகவும் திருநெல்வேலிச் சந்தையின் கிழக்குப்புறமாகவும் பாடசாலை வீதியில் அமைக்கப்படுகின்ற 04 கடைகளும் வாடகைக்கு விடப்படும்.

**கடை ஒன்றின் விஸ்தீரணம் - 14' 6" X 9' 7"**

வாடகைக்கு பெறவிரும்புவோர் கடைகளை பார்வையிட்டு விண்ணப்பப் படிவத்தினை காரியாலயத்தில் ரூபா 500/- செலுத்திப் பெற்று கடை இலக்கத்தினை குறிப்பிட்டு செலுத்தக்கூடிய முற்பணம், வாடகை என்பவற்றை குறிப்பிட்டு 21.02.2024 திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக **"தலைவர், நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி"** எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு சங்கக் காரியாலயத்துடன் அலுவலக நேரத்தில்** தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு : **021 222 2143**
**021 222 2969**

தலைவர்,
நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி.

(cr.41752) (4 x10)

## நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
### ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
## வாக்காளர் இடாப்பு காட்சிப்படுத்தல்

சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தல் நடவடிக்கைக்காக வாக்காளர் இடாப்பு 07.02.2024 தொடக்கம் 26.02.2024 வரை கிளைகளில் காட்சிப்படுத்தப் படவுள்ளது. தற்போது இயங்காத நிலையில் உள்ள கிளைகளின் வாக்காளர் இடாப்பு பின்வரும் இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகிறேன்.


| | கிளை இல. | கிளையின் பெயர் | காட்சிப்படுத்தப்படும் இடம் |
|---|---|---|---|
| 01. | 01 | கல்வியங்காடு | எரிபொருள் நிலையம் கல்வியங்காடு. |
| 02. | 03 | பொற்பதி | பொற்பதி சனசமூக நிலையம். |
| 03. | 04 | நாகபூசணி | கோண்டாவில் கிழக்கு, சனசமூக நிலையம். |
| 04. | 08 | கோண்டாவில் மேற்கு | உபதபால் நிலையம் கோண்டாவில் மேற்கு. |
| 05. | 12 | கொக்குவில் அரசடி | கிளை இல.13 A கொக்குவில் மேற்கு. |
| 06. | 15 | இராசபாதை | எரிபொருள் நிலையம் கல்வியங்காடு |
| 07. | 21 | பரமேஸ்வராச் சந்தி | திருநெல்வேலி மக்கள் கடை |
| 08. | 22 | திருநெல்வேலிச் சந்தி | திருநெல்வேலி மக்ள் கடை |
| 09. | 25 | முடமாவடி | கிளை இல.18 காளிகோவிலடி. |

மேலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ள வாக்காளர் பட்டியலில் உறுப்பினர் ஒருவர் பெயர் காணப்படாமை, உறுப்பினர் பெயர், உறுப்பினர் இலக்கம், உறுப்பினர் முகவரி என்பன தவறாக காணப்படுதல், ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் ஒரு உறுப்பினரின் பெயர் காணப்படுதல், குறித்த கிளையின் உறுப்பினர் அல்லாத ஒருவரின் பெயர் காணப்படுதல், இரு கிளைகளில் உறுப்பினர் ஒருவரின் பெயர் காணப்படுதல் போன்ற ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் 09.03.2024 நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் சங்கச் செயலாளரிற்கு எழுத்து மூலம் அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி**
**தொ.இல. 021 222 2143**

(CR.41748) (N-1)

# மரண அறிவித்தல்



தோற்றம்
18.06.1948

மறைவு
07.02.2024

## இராமநாதன் முத்துப்பிள்ளை

நீர்வேலி தெற்கு நீர்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் முத்துப்பிள்ளை நேற்று (07.01.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு சின்னப்பிள்ளை தம்பதியின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சின்னப்பிள்ளை தம்பதியின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி இராமநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவப்புனிதம், இரத்தினமலர், ஞானகலா, கருணாமூர்த்தி, செல்வமூர்த்தி, விக்னேஸ்வரி (கனடா), ஆனந்தமூர்த்தி ஆகியோரின் அன்புத்தாயாரும் நவரத்தினம் காலஞ்சென்ற சத்தியபாமா மற்றும் சத்தியமூர்த்தி, தசீலா ஆகியோரின் அன்பு மாமியாரும், சாந்தரூபன் (ஜேர்மனி), துஷ்யந்தி (லண்டன்), மோகனதாஸ், துவாரகா (பிரான்ஸ்), சுபாயினி (கனடா), தயாளினி, வினோதினி (கனடா), தாரணி, சுகன்யா (கனடா), லவன் (கனடா), சரணியா, சர்மிதா, சுதர்சினி, மேனகா, யானுகா, தேனுகா, ஜெனகன், தருண் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான பூதத்தம்பி, வியாகேசு, சண்முகம், சிவபாலன், பார்வதி மற்றும் வேதவனம் (கனடா), கணபதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற அதிபர் ஆசிரியர் கலாசாலை-கோப்பாய்), சத்தியதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து (கனடா), கைலைநாதன், கனகரத்தினம் மற்றும் சிவக்கொழுந்து (கனடா), தவமணி (கனடா), இரத்தினம் (கனடா), காலஞ்சென்றவர்களான இரத்தினம்-வள்ளியம்மை சின்னத்தம்பி-சிவகாமி, சின்னத்தம்பி கணபதிபிள்ளை ஆகியோரின் மைத்துனியும், ஜனுசன், லதுசன், சிபிராஜ், தருணிகா, சுருதி, ஆரபி, கெவான், டஷ்சினி, இதயனி, இதயவேணி, இதயநிலா, அக்ஷயா, அபூர்விகா, ஆதிரன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2024) வியாழக்கிழமை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நீர்வேலி தெற்கு**
**நீர்வேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 27826) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைக்கும்பலால் தாக்கப்பட்டார் பிரதேசசபை முன்னாள் உறுப்பினர்

போதையில் நின்ற இளைஞர் குழு தாக்கியதில் சாவகச்சேரி பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் கு.குகானந்தன் தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவ மனையில் நேற்று முன்தினம் இரவு சேர்க்கப்பட்டுள்ளார். மந்துவில் மேற்கு சனசமூகநிலையத்துக்கு அருகாமையில் போதையில் நின்ற இளைஞர் குழுவின் அட்டகாசம் தாங்காது அயலில் இருந்த மக்கள் சிலர் உள்ளூராட்சி முன்னாள் உறுப்பினர் குகானந்தனைஅங்கு அழைத்துள்ளனர். முன்னாள் உறுப்பினர் அங்கு சென்றபோது சாவகச்சேரி பிரதேச சபையால் பொருத்தப்பட்டிருந்த மின்குமிழ்களை, போதையில் நின்றவர்கள் கழற்றிக் கொண்டிருந்தனர். மின்குமிழ்களை ஏன் கழற்றுகின்றீர்கள் என்று முன்னாள் உறுப்பினர் கேட்டபோது, போதையில் நின்றவர்கள் கொட்டனால் தாக்கியதால் தலையில் காயமடைந்து சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(ஓ-159)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 14 • 06 • 1939

மறைவு 20 • 01 • 2023

### அமரர் சிவசம்பு வன்னியசேகரம்

திதி 08.02.2024


ஆயாக்கடவை சித்தி விநாயகனை
அனுதினமும் போற்றி செய்து
அவனடி ஏகினீர்
ஆயாக்கடவையான் பாதங்களில்
ஆத்மா சாந்தி பெற
பிரார்த்தனை செய்கின்றோம்.

புன்னாலைக்கட்டுவன்
தெற்கு
சுன்னாகம்.

அன்பு மனைவியும்
அன்பு உள்ளங்களும்

CS 27827 V-1

## மரண அறிவித்தல்



### செல்வநாயகம் பூபதி

உரும்பிராய் மேற்கு, உரும்பிராயினைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் பூபதி அவர்கள் நேற்று (07.02.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் கனகம்மா தம்பதிகளின் இளைய மகளும், காலஞ்சென்றவர்களான கனகரட்ணம் சின்னம்மா தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற செல்வநாயகத்தின் அன்பு மனைவியும், கனகரட்ணம், தர்மரட்ணம், விஜயரட்ணம், மனோரஞ்சினி, செல்வரட்ணம், கலாரூபி, காலஞ்சென்ற பஞ்சரட்ணம் ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசலட்சுமி, விக்னேஸ்வரி, சாந்தினி, துரைசிங்கம், ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, இரத்தினம், பாக்கியம், வேலாயுதம், இராசையா, தெய்வேந்திரம், கந்தசாமி, கண்மணி மற்றும் சரஸ்வதி, பொற்கொடி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கஜந்தன் - ரஜிதா, மதூசியன் - தர்மினி, ஜானு - சுஜீவன், சோபிதா - ராஜ்குமார், மகிஷா - ரஜீவன், பரன்ராஜ் - அபிரா, கிரிஷா, நிதுஷா - அசந், ரவிஷா, ஜெனுசன், கௌசிகா - லொயிட்ஸ், கேசவன், அம்புஜா - மதிரூபன், ஜெனா - இதயரூபன், ஜேசன், ஜெனிஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2024) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்.

பலாலி வீதி,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27828) S-1

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -13, அராலி வீதி 2ம் குறுக்குத்தெரு. 40 ஆதன இலக்கத்தை கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என்ற பெயரில் யாழ். மாநகரசபை ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

இதன் கீழ் அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனத்தை மீரான் மொகைடீன் கைம்பெண் ஜமீலா 24.09.1983 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு தம்பித்துரை சண்முகராஜா முகதாவில் 2313 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய Administratrix conveyance உறுதி மூலம் தெரியப்படுத்தியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை மீரான் மொகைதீன் மொகமட் சகீர் 18.06.2013 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு தாகா மொகமட் லபீர் முகதாவில் 3145 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் மீரான் மொகைதீன் மொகமட் அமீன் நன்கொடையாக வழங்கியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை மீரான் மொகைதீன் மொகமட் அமீன் 24.06.2012 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு தாகா மொகமட் லபீர் முகதாவில் 3146 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிமூலம் சாகுல் ஹமீட் மொகமட் ரகுமான் வழங்கியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை சாகுல் ஹமீட் மொகமட் ரகுமான் 05.08.2016 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு முடியப்பு றெமீடியஸ் முகதாவில் 1376 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் மொகமட் தாப்தீன் மொகமட் சித்திக் என்பவரிற்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி, வண்ணார் பண்ணை, கோவிற்பற்று, வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் மாநகர சபை, J/87 கிராம அலுவலர் பிரிவு "உப்புக்குளம் கரையும் பம்மை வெளியும்" நில.பர நான்கு (04). இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் கே. பரமேஸ்வரன் அவர்களால் 2016.08.06ம் திகதி 930A/2012 இலக்கத்தில் அளந்து வரைந்த படத்தில் 1-4 துண்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இதில் துண்டு இரண்டு எனக்காட்டப்பட்ட நெற்பரப்பு (1) ஒன்று இது மீண்டும் இதே நில அளவையாளர் இதே திகதியில் 930B/2012ம் இலக்கத்தில் அளந்து வரைந்த படத்தில் "துண்டு 01" எனக்காட்டப்பட்டுள்ளது.

**இதற்கு எல்லைகள்:-**

கிழக்கு - 2ம் குறுக்குத்தெரு
வடக்கு - குறித்த 930A/2012 ம் இலக்கப்படத்தில் துண்டு 1 எனக்காட்டப்பட்ட பகுதி
மேற்கு - மயானம்.
தெற்கு - குறித்த 930A/2012 ம் இலக்கப்படத்தில் துண்டு 03 எனக்காட்டப்பட்ட பகுதி.
இதடங்கலும், இதிலுள்ள கிணறும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

தற்போது மொகமட் தாப்தீன் மொகமட் சித்திக் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனத்தின் ஏதேனும் ஒரு பகுதிக்கு/ முழுமையாகவோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது மொகமட் தாப்தீன் மொகமட் சித்திக் என்னும் பெயர்களிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ் ஆதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

(CR.41748) (N-1)

## நினைவலைகள்

10 ஆம் ஆண்டு | 11 ஆம் ஆண்டு





அமரர்
செல்லத்துரை
சின்னராசா

மலர்வு 27.11.1930
உதிர்வு 29.01.2014

அமரர் சின்னராசா
செல்வமணி
(சிவமணி)

மலர்வு 10.04.1940
உதிர்வு 27.03.2013

வாழ்க்கை எனும் பாதையிலே
எம்மோடு பயணித்த எம் தெய்வங்களே!
உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு மறையாது...

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

இணுவில் கிழக்கு.

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(cs 53819) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்மாவட்டம் காரைநகர் மாப்பாணவூரி பதியில் எழுந்தருளி இருக்கும்
அருள் மிகு நாச்சிமார் அம்பாள் ஆலய

# 1008 சங்காபிஷேக விஞ்ஞாபனம் ( மணவாளக்கோலம்)

நிகழும் சோபகிருதி வருடம் [2024 ஆம் ஆண்டு]

திருச்சிற்றம்பலம்

புரம் என்று உனை அடைந்தேன் தமியேனும், உன்பத்தருக்குள்
தரம் அன்று இவன் என்று தள்ளத் தகாது, தரியலர்தம்
புரம் அன்று எரியப்பொருப்புவில் வாங்கிய,போதில் அயன்
சிரம் ஒன்று செற்ற கையான் இடம் பாகம் சிறந்தவளே

திருச்சிற்றம்பலம்

நாச்சிமார் அம்பாள் அடியார்களே!

நிகழும் சோபகிருதி வருடம் தைத்திங்கள் 26ம் நாள் (09.02.2024) வெள்ளிக்கிழமை 6.30 மணி முதல் விநாயக வழிபாட்டுடன் வழிபாடுகள் ஆரம்பமாகி தொடர்ந்து 1008 சங்காபிஷேகம் நடைபெற திருவருள் கை கூடியுள்ளது. அதனை தொடர்ந்து விநாயகப் பெருமான் மற்றும் நாச்சிமார் அம்பாள் மற்றும் முருகப்பெருமான் வள்ளி தெய்வானை மற்றும் வைரவப் பெருமானுக்கு விசேட அபிசேகங்கள் இடம்பெறும். அத்தோடு பிரதான கும்பமும் வீதி வலம் வந்து அம்பாளுக்கு அபிசேகம் நடைபெறும். அடியவர்கள் அனைவரும் ஆசார சீடர்களாக வருகை தந்து அம்பாளின் திருவருளைப் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ வேண்டுகிறோம். 1008 சங்காபிஷேகம் இடம் பெற்று விசேட பூஜைகள் நடைபெற்று அதனை தொடர்ந்து மகேஸ்வர பூஜையும் இடம்பெறும்.

## விசேட மங்கள வாத்தியக்கலைஞர்கள் வருகை தந்து மங்கள இசைகள் இடம்பெறும்

மாலை 4.00 மணிக்கு மாணவர்களின் பஜனை நடைபெற்று 5.00 மணியளவில் சகஸ்ரநாம அர்ச்சனை இடம் பெற்று, அதனை தொடர்ந்து மாணவர்களினால் விளக்கு பூஜை மற்றும் நாச்சிமார் அம்பாளுக்கு சகஸ்ரநாம அர்ச்சனைகள் இடம் பெறும். பூஜைகள் இடம் பெறும் பொழுது அம்பாளுக்கு இடுக்கு வாத்தியம் ஒலிக்கும் வண்ணம் பூஜைகள் நடைபெறும்.

பூஜைகள் நடைபெற்று முடிவடைந்ததும் அம்பாளின் விபூதி பிரசாதம் , அன்னதானமும் வழங்கப்பெற்று இனிதே நிறைவுபெறும்.

### பிரதான குரு
பிரதிஷ்டா ரத்தினம்
சிவஸ்ரீ ஸ்ரீ.மதுசூதனக்குருக்கள்
(மகா கணபதி பிள்ளையார் சித்தன்கேணி)
ஆலய குரு
(சிவஸ்ரீ.சு.வைத்தீஸ்வரக்குருக்கள்
கிரியாரத்தினம்,கிரியாதிலகம்,
சாதகவேந்தன்)
பிரம்ம ஸ்ரீ வை . சுகிர்தன் சர்மா
( சித்தன்கேணி)

### சாதக வேந்தர்கள்
சத்தியோத சிவாச்சாரியார்
சிவஸ்ரீ.வை.சுரேந்திரக்குருக்கள் (நல்லூர்)
ஈசான சிவாச்சாரியார்
சிவஸ்ரீ.வை.சுகிர்தக்குருக்கள்(சித்தன்கேணி)
(புளியங்கூடல் இந்தன் முத்து விநாயகர் ஆலயகுரு)
சிவஸ்ரீ.தி. ஜெயானந்தசர்மா (சங்கானை)

### மங்கள வாத்தியம்
கைலாய கம்பர்
சந்திரபிரியர் குழுவினர்

### விஷேட மங்கள வாத்தியம்

N.K. வீராச்சாமி
(காரைநகர் ஈழத்து சிதம்பர ஆஸ்த்தான வித்துவான்
நாதஸ்வரச்சக்கரவர்த்தி ஈழநல்லூர் P.S பாலமுருகன்
நாதஸ்வர வித்துவான் P.S ஜெயசங்கர்
தவில்லயஞானபாலன் P.S செந்தில்நாதன்
தவில் வித்துவான் U. ஜெயந்தன்
நாதஸ்வரவித்துவான்கள் பாலமுருகன் சாரங்கன்
தவில் வித்துவான் சங்கரமூர்த்தி ராமநாதன்

நாதஸ்வர கலாநிதி பஞ்சமூர்த்தி குமரன்
நாதஸ்வர இளம் புயல் R.ரஜீவன்
தவில்நாதமணி R.பாலவர்ணன்
இளந்தவில் ஜெனிலசீ.S.சிவகரன்
கலாநிதி பஞ்சாபிகேசனின் பேரப்பிள்ளைகள்
வில்லிசைஸ்வரன் சித்தார்த்தன்
வில்லிசைஸ்வரன் பிரசாந்தன்
சிவதாஸ் சர்மன்
செல்வகுமரன் விநுகன்

N.K வீராச்சாமியின் மகன் தவில் ஒலி அம்பலவாணன்
நாதஸ்வர இளந்தென்றல் நடராஜா ராஜ்குமார்
நாதகான விநோதன் ராஜேந்திரன் ஹரிஹரன்
தவில் ஞான பாலன் நந்தகுமார் பாலுஜன்

இங்ஙனம்
ஆலய நிர்வாகம்.

சுப மஸ்து
"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடவிதானங்களுக்குரிய ஆசிரியர்கள் நியமனம்!

## ஆளணிப்பற்றாக்குறையை நீக்க ஆளுநர் நடவடிக்கை

**யாழ்ப்பாணம், பெப். 8**

**பாடவிதானங்களின் அடிப்படையில் நியமனங்கள் பெற்றுள்ள ஆசிரியர்களை அந்தந்தப் பாடங்களுக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாணத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பான மீளாய்வுக் கூட்டம் கல்வியமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த பங்கேற்புடன் வவுனியா கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.


வடக்கு மாகாண ஆளுநர், மாகாணத்தில் நிலவும் சிக்கல்கள் தொடர்பிலும், கல்வித்துறைசார் தேவைப்பாடுகள் தொடர்பிலும் தெளிவுபடுத்தினார். அந்தவகையில், பின்தங்கிய பகுதிகளில் காணப்படும் அனைத்துப் பாடசாலைகளுக்கும் தேவையான வசதிகளை பெற்றுக் கொடுக்க மத்திய கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தினார். வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் பௌதீக வளப்பற்றாகுறை நிலவுவதுடன் சில பாடசாலைகளில் தேவைக்கு அதிகமான முறையில் ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். அதற்கமைய நியமனங்களின் அடிப்படையில் ஆசிரியர்களை நெறிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் ஆளுநர் தெரிவித்தார். (ச-26)

# மன்னார் மாணவர்கள் நேற்றுப் போராட்டம்

மன்னார், பெப். 8

மடு கல்வி வலயத்துக்கு உட்பட்ட கள்ளியடி பாடசாலையில் தொடர்ச்சியாக மூன்று ஆசிரியர்களை வேறு பாடசாலைக்கு இணைப்பு செய்யப்பட்டுள்ளமை மற்றும் பாடசாலை அதிபரை இடமாற்றம் செய்தமை ஆகியவற்றை கண்டித்து பாடசாலை மாணவர்கள், பெற்றோர், கிராம மக்கள் இணைந்து நேற்றுப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

பாடசாலை அதிபர் மற்றும் மூன்று ஆசிரியர்களின்றி கள்ளியடி பாடசாலையில் மாணவர்கள் கல்வியைத் தொடர்கிறார்கள். மாணவர்களின் கல்வி நடவடிக்கை இதனால் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. நியமிக்கும் ஆசிரியர்களுக்கு இணைப்பை வழங்கி



னால் பாடசாலையை நடத்துவது எப்படி?, நிரந்தர ஆசிரியர்களை எப்போது தருவீர்கள்? உடனடித் தீர்வு வேண்டும், கல்விக்கான உயர் அதிகாரிகளே பதில் கூறுங்கள், எமது கிராமங் களின் கல்வி அடையாளமே எமது பாடசாலை. அதை அழிக்க வேண்டாம் என்று எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியிருந்தனர். மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது அந்த வீதியூடாக பயணித்த மாகாண கல்வித் திணைக்கள அதிகாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடி உரிய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர். (ஒ-56)

யாழ் **கலாலயா** பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)
T.P : 077 711 0383
**A/L பெறுபேறுகளை எதிர்பார்த்து காத்திருக்கும் மாணவியரே!**
வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!! சொந்தமாக தொழில் செய்ய விரும்பும் நங்கையரே!!!
**உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**
கேக் ஐசிங், கேக் மற்றும் உணவு தயாரித்தல், Hair Dressing
Facials, Pedi cure, Mani cure, மணப்பெண் அலங்காரம்,
பலவிதமான சேலை அணியும் முறைகள் (Beautician பயிற்சி)
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் : 14.02.2024 புதன் காலை 10.00
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் : 18.02.2024 ஞாயிறு காலை 10.00

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 08.03.1952 மறைவு 07.02.2024

யாழ் பிராந்திய காரியாலயத்தில், தெல்லிப்பளை கமநல சேவை நிலையத்தில், அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி எ.ஜெயனி அவர்களின் அன்பு மாமியார்

**அமரர் சிவசம்பு யோகேஸ்வரி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயருறும்
நலன்புரிச் சங்கம்,
தென்னை பயிர்ச் செய்கை சபை
யாழ்ப்பாண பிராந்திய காரியாலயம்,
பளை - கிளிநொச்சி

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



**அமரர் சிதம்பரநாதன் ஏகாம்பரநாதன்**

குடும்பத்தின் குலவிளக்கே
ஆளுமையின் ஓர் அடையாளமே
எம் உள்ளத்தின் உறைவிடமே
நெஞ்சை விட்டு அகலாத
அன்பின் உறைவிடமே
உங்கள் முகம் காணாது
தவிக்கின்றோம் தளர்கிறோம்
ஆத்மா சாந்தியடைய
இறைவனை இறைஞ்சுகின்றோம்
சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்புடையீர்:

கடந்த 09.01.2024 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 08.02.2024 வியாழக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினருடன் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரணி
இயற்றாலை
வரணி

இங்ஙனம்
குடும்பத்தினர்.

# 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 09.01.2024 செவ்வாய்க்கிழமையன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

**அமரர் முருகன் வீரசிங்கம்**

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (08.02.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

கைதடி மத்தி,
குமரநகர்,
கைதடி.

மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண....

அவர் தனது கொள்கை விளக்கவுரையில் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக கருத்து எதையும் முன்வைக்காத நிலையில், மாகாணசபை அதிகாரங்கள் தொடர்பில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: ஒன்பது மாகாணங்களினதும் பொருளாதாரத்தைப் பலப்படுத்த அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அரசமைப்பில் மாகாணசபை அதிகாரங்களின் மூன்றாவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாகாணசபைகளுக்கு சில அதிகாரங்களை உரிய வகையில் வழங்குவோம்.

தொழிற்கல்வி, விவசாயம் போன்ற துறைகளை உதாரணமாகக் கூறலாம். அதன் மூலம் ஒவ்வொரு மாகாணத்திலும் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தமுடியும். மாகாணங்களுக்கு இடையில் பொருளாதாரப் போட்டித் தன்மையை உருவாக்குவதன் மூலம், ஒன்பது மாகாணங்களும் ஒரே நேரத்தில் அபிவிருத்தியடைவதற்கான வாய்ப்பு உருவாகும்- என்றார். (அ-எ-44)

## நாட்டுக்கான...

விடுத்துள்ளார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் 5 ஆவது கூட்டத்தொடர் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர் கொள்கைப் பிரகடனத்தை முன்வைத்து உரையாற்றிபோதே அவர் மேற்கண்டவாறு அழைப்பு விடுத்தார்.

அவர் தனது உரையில் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டைக் கட்டியெழுப்பும் கனவை நனவாக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டுமென மீண்டும் கேட்டுக் கொள்கின்றேன். நாங்கள் செயற்படுத்தும் முறையை விட சிறந்த மாற்று முறைகள் இருந்தால், அவற்றைக் கூறுங்கள். அவற்றை ஆழமாகப் ஆராய்வோம். அவை குறித்தும் கலந்துரையாடுவோம்.

அவ்வாறான பேச்சுக்குத் தயார் எனில், அந்தக் கலந்துரையாடல்களுக்கு சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி ஆகியவற்றின் பிரதானிகளையும் அழைக்க முடியும்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இருப்பவர்கள் என்னுடன் பல காலமாக அரசியலில் ஈடுபட்டவர்கள். நான் அரசியலுக்கு அறிமுகப்படுத்தியவர்களும் உள்ளனர். நாட்டுக்கான பொதுப்பயணத்தில் இணைந்துகொள்ள பொதுஜன பெரமுனவால் முடியுமாயின் ஐக்கிய மக்கள் சக்தியால் அதைச் செய்ய முடியாதிருப்பது ஏன்?

மக்கள் விடுதலை முன்னணி நல்லாட்சி அரசில் காலத்தில் எம்முடன் நெருக்கமாகச் செயற்பட்டது.

ஊழல் ஒழிப்புச் செயற்பாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க செயற்பட்டார். அவ்வாறிருக்க நாட்டின் பொது முன்னேற்றத்துக்கான பயணத்தில் இணைய முடியாதிருப்பது ஏன்?

எம்மீது சாட்டப்பட்டிருக்கும் பொறுப்புக்களை நாம் நிறைவேற்றுவோம். பல்வேறு தனிப்பட்ட நோக்கங்களுக்காக, இந்தப் பொறுப்புகளைப் புறக்கணித்தால் வரலாற்றில் நாம் துரோகிகளாக அடையாளப்படுத்தப்படுவோம். அதனால் புதிய பயணத்தைத் தொடர்வோம். புதிய எதிர்காலத்தை, புதிய நாட்டை உருவாக்குவோம்-என்றார். (அ-எ-44)

## சஜித்...

வெளிநடப்பு செய்தது. எனினும், சரத் பொன்சேகா உட்பட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் சபைக்குள் இருந்து ஜனாதிபதியின் உரையை செவிமடுத்தனர்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை ஆரம்பமானதும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தியினர் வெளிநடப்பு செய்தனர். எனினும், ஐக்கிய மக்கள் சக்தியுடன் தற்போது மோதலில் ஈடுபட்டுள்ள அந்தக் கட்சியின் தவிசாளர் சரத் பொன்சேகா வெளிநடப்புச் செய்யவில்லை. அவர் சபைக்குள் இருந்து ஜனாதிபதியின் உரையை செவிமடுத்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ராஜித சேனாரத்ன, குமார வெல்கம, சம்பிக்க ரணவக்க, இஷாத் ரஹ்மான், வடிவேல் சுரேஷ் போன்ற ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்களும் சபைக்குள் இருந்தனர். (அ-ஒ-44)

## தன்னிச்சையான...

உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாபதிதி ரணில் விக்கிரமசிங்க அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்பைக் கோரியிருந்த நிலையில், லக் ஷ்ன் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் அரசாங்கத்துக்கு ஆதரவளித்தோம். 21ஆவது திருத்தம் உட்படப் பல சட்டங்களை நிறைவேற்ற ஆதரவளித்தோம். கைகோர்க்க அழைப்பு விடுக்கும் இந்த அரசாங்கம், எதிர்க்கட்சிகள் தொடர்பாக எந்த அக்கறையும் காட்டுவதில்லை.

அரசாங்கம் இப்போது தன்னிச்சையாகவே செயற்படுகின்றது. உயர்நீதிமன்றத்தின் பரிந்துரைகளைக் கணக்கில் எடுக்காது அரசாங்கம் நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை நிறைவேற்றியது. உயர்நீதிமன்றத்தின் 11 பரிந்துரைகள் பின்பற்றப்படவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு இம்முறை எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படவில்லை. தன்னிச்சையாகச் செயற்படும் அரசாங்கத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவு வழங்காது - என்றார். (அ-எ-இ)

## ஒப்பந்தம்...

இலங்கைக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் தோன்றியுள்ளன. ஆயினும் தொடர்ந்து பேச்சுகள் நடைபெற்று வருகின்றன.

இந்தியா, மலேசியா, வியட்நாம், சீனா ஆகிய நாடுகளுடன் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளவுள்ளது. தாய்லாந்துக்கும் இலங்கைக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஏற்கனவே கைச்சாத்தாகியுள்ளது - என்றார். (அ-எ-6)

## பாரதியின்...

நாடு பற்றி எழுதிய கவிதையொன்று நினைவுக்கு வருகிறது. அதை சிங்களத்தில் மொழி பெயர்த்தவர் பேராசிரியர் சுனில் ஆரியரத்ன.

"முப்பது கோடி முகமுடையாள்
உயிர் மொய்ம்புற ஒன்றுடையாள்
இவள் செப்பு மொழிபதி னெட்டுடையாள்
எனில் சிந்தனை ஒன்றுடையாள்"

அவ்வாறான ஒன்றுபடும் எண்ணம் எமக்கு ஏன் வரவில்லை? மீண்டும் மீண்டும் சகல கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கிறேன். பொதுநோக்கத்துடன் ஒன்றுபடுங்கள் என்று பாரதியின் கவிதையோடு ஒன்றுபடலுக்கான அழைப்பை ரணில் விடுத்தார். (அ-எ-44)

## சில்மிஷக்காரர்களுக்கு..

அணிந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இந்த விசேட நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் பதில் பொலிஸ்மா அதிபர் ஆகியோரின் ஆலோசனைக்கு அமைய இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடக்கிலும் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. சிவில் உடையில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பஸ்கள் மற்றும் நகரப் பகுதிகள், சனநெரிசல் மிக்க இடங்களில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பெண்களுடன் தகாத முறையில் நடந்துகொள்பவர்கள் இனங்காணப்பட்டு உடனடியாகக் கைது செய்யப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சிவில் உடையில் பயணிக்கும் உத்தியோகத்தர்களுக்கு உதவி தேவைப்படும் போது அவர்களுக்கு உதவிகளை வழங்குவதற்குத் தயாராக, சீருடை அணிந்த பொலிஸ் உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுக்கள் செயற்படுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன. (அ-எ-26)

## தும்புத்....





பிரிவினரும் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். கரைச்சிப் பிரதேச சபையின் தீயணைப்பு வாகனம் பழுதடைந்துள்ளதால் தீயணைப்புப் பிரிவு தண்ணீர் பவுஸர் மூலம் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட போதும், தும்புத் தொழிற்சாலையில் இருந்த தும்பு மற்றும் மின்உபகரணங்கள் அனைத்தும் எரிந்து நாசமாகியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தீப்பரவலுக்கு மின் ஒழுக்கே காரணம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

"இரு தடவைகள் மின் இணைப்பு வயரில் சேதம் ஏற்பட்டது. மின்சாரசபைக்கு அறிவித்தபோது, அவர்கள் வந்து அறுந்த வயரை முடிந்துவிட்டுச் சென்றனர். அந்தப்பகுதியில் ஏற்பட்ட மின் ஒழுக்கே தீப்பரவலுக்குக் காரணம். தொழிற்சாலை முற்றாக அழிந்துள்ளது. சுமார் 35 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான பொருள்கள் அழிந்துள்ளன. எமது வாழ்வாதாரம் நிர்க்கதியாகியுள்ளது" என்று தும்புத் தொழிற்சாலை உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-113)

## 4 கோடி....

இந்தியாவில் இருந்து சட்டவிரோதமான முறையில் கொண்டுபரப்பட்ட அரிசி, மஞ்சள், கொத்தமல்லி, நிலக்கடலை உட்பட 7 ஆயிரம் கிலோ உணவுப் பொருள்களும், கிருமிநாசினிகளும் இவ்வாறு அழிக்கப்பட்டன.

இவை கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச எல்லைப்பகுதியில் வைத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டு, நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டிருந்தன. இவற்றை உடைமையில் வைத்திருந்த நபர்களுக்கு நீதிமன்றம் ஒன்றரை இலட்சம் ரூபா தண்டம் விதித்தி ருந்தது.

இந்தச் சான்றுப்பொருள்கள் நேற்று வவுனியா, பம்பைமடுவில் வவுனியா மேலதிக நீதிவான் ஜெ.சுபாஜினி மற்றும் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபைச் செயலாளர் விமலவேணி நிசங்க, சுகாதாரப் பரிசோதகர்கள் முன்னிலையில் அழிக்கப்பட்டன. (அ-எ-110)

## மணலுடன்...

நேற்று மீசாலை - புத்தூர் வீதியில் நடந்துள்ளது. சட்டவிரோதமாக மணல் ஏற்றிய டிப்பர் ஒன்று அந்த வழியால் செல்கின்றது என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

வீதியால் வந்த டிப்பர் வாகனம் ஒன்றைப் பொலிஸார் நிறுத்த முயன்றபோது, பொலிஸாரின் அறிவுறுத்தலைமீறிச் டிப்பர் வாகனத்தைச் செலுத்திச் சாரதி சென்றுள்ளார்.

பொலிஸார் டிப்பரைத் துரத்திச் சென்றபோது, சாரதி டிப்பர் வாகனத்தில் இருந்த மணலைக் கீழே கொட்டியவாறு தப்பிச் செல்ல முயன்றுள்ளார். ஒரு கட்டத்தில் பொலிஸார் வாகனத்தின் சக்கரத்துக்குத் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர்.

கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் வாகனம் வீரவாணிச் சந்தியில் தடம்புரண்டது. டிப்பர் வாகனச் சாரதியும், உதவியாளரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். கைதுசெய்யப்பட்டவர்கள் அச்சுவேலிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சந்தேகநபர்கள் 22 மற்றும் 23 வயதுடையவர்கள் என்றும் பளை முள்ளியடி, சோரம்பற்று ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட இருவரும் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று அச்சுவேலிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (அ.எ-125-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்புலன்ஸ் சேவையை திரும்பவும் இயக்குங்கள்

முல்லைத்தீவு, பெப். 8

முல்லைத்தீவு - மாங்குளம் பிரதேசத்துக்கான இலவச அம்புலன்ஸ் சேவை கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக இடைநிறுத்தப்பட்டுள்ளதால் அந்தப் பகுதி மக்கள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்குகின்றனர்.

குறிப்பாக பாண்டியன்குளம், நட்டாங்கண்டல், மல்லாவி, கோட்டை கட்டிய குளம், அம்பலப்பெருமாள், அம்பகாமம், இந்துபுரம், வசந்தபுரம் போன்ற பல்வேறு பகுதியைச் சேர்ந்த மக்கள் நாளாந்தம் இந்தச் சேவையைப் பெற்று வருகின்றனர். இந்த நிலையில் தற்போது அம்புலன்ஸ் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளதால் நோயாளர்கள் 3 ஆயிரம் ரூபா வரையில் ஓட்டோவுக்குச் செலவழிக்க வேண்டியுள்ளது.

ஆகவே அம்புலன்ஸ் சேவையை மீண்டும் விரைவாக இயக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-19

**மலிவு விற்பனைக்கு**

பாடசாலை மாணவர்களுக்கான தரமான காலுறைகள் (Socks)

076 315 6470

**வேலைக்கு ஆள் தேவை (பெண்)**

தனியார் நிறுவனம் ஒன்றின் கைதடியில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு உணவுப் பண்டங்கள் தயாரிக்கும் அடுப்பு வேலைக்கு நன்கு அனுபவமுள்ள பெண் வேலையாட்கள் தேவை. மாத சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் ஆர்வமுள்ளவர்கள் [illegible]


தொடர்பு: 074 381 0348

# சிறுநீரகம் தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 22 வயதுடைய $O^+$ குருதிவகையைச் சேர்ந்த இளைஞன் ஒருவருக்கு அதே ஒத்த குருதிவகையைச் சேர்ந்த ($O^+$) சிறுநீரகம் அவசரமாகத் தேவை.

தொடர்பு: 077 467 7623
077 234 5459

# மரண அறிவித்தல்



தோற்றம் 10 . 01 . 1946

மறைவு 07 . 02 . 2024

## பஞ்சலிங்கம் ரேணுவதி

இணுவில் மேற்கு இணுவில் கே.கே.எஸ். வீதியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பஞ்சலிங்கம் ரேணுவதி நேற்று புதன்கிழமை காலை பரமானந்தவல்லி அம்மனினடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு ஞானத்தின் மூத்த புதல்வியும். அமரர் செல்லையா பஞ்சலிங்கத்தின் பாசமிகு மனைவியும். அஜந்தனின் அன்புத் தாயாரும். சந்திராவதி. தேவராஜா, செல்வராஜா, புஷ்பவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கணேசராஜா, துஷ்யந்தி. மதுரா ஆகியோரின் அன்பு மாமியாரும். ரிஷிகேஷன். சாயிகௌசல்யா, வைஷாலி, பார்த்தன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.02.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
+94 (76) 201 8768, + 94 (21) 205 4403

(CS 27832) A-1

# மரண அறிவித்தல்



மண்ணில் 22.04.1979

விண்ணில் 01.02.2024

## ஐயாத்துரை நாதன்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை நாதன் 07.02.2024 அன்று இலங்கையில் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை மனோன்மணி தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகராசா மற்றும் நாகராணி (கௌரி) நிமலநாதன் ஆகியோரின் அன்பு சகோதரனும் வித்ஜரூபியின் அன்புக் கணவரும் நாவிந் இன் அன்புத் தந்தையும் பிறாங்கோ, சந்திரராசா, ரேவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கன்சன், டிலோஜன், பிறண்ஷியா ஆகியோரின் மாமாவும், நிஷ்மிந், நிஸ்மா, றிஸ்விந், ஆகியோரின் சித்தப்பாவும் ஜராவின் அன்புப் பேரனும், ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 08.02.2024 அன்று இல. 124, ஆனந்தன் வடலி வீதி அரியாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரிகைகளுக்காக பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 28002) V-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.02. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.